and the House can best consult its own dignity by not taking serious notice of them. So, the publication in 'Thennagam' need not be taken serious notice of.

(ஆ) திரு. எம். ஏ. லத்தீப் பேரவையைப்பற்றிக் குறிப்பிட்ட சில சொற்கள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு அவையுரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். அதைக் கொண்டுவருவதற்கு நான் அவரை அனுமதிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, 184-வது பிரிவுப்படி நான் கொண்டுவந்திருக்கக்கூடிய ப்ரிவிலேஜ் மோஷன் 21-ம் தேதி இந்தச் சட்டமன்றத்தில் திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினையின் பேரில் விவாதம் நடந்து கொண்டிருந்தபோது, நமது மாண்புமிகு மெம்பர் லத்தீப் அவர்கள் 'The House is going to dogs' என்று குறிப்பிட்டார்கள். இது ஒரு சாதாரணமான சொல் என்று விடுவதற்கில்லை. நமது சபை நடவடிக்கைகளைப்பற்றி வெளியில்பத்திரிகையில் தவறாக எழுதினாலும் கூட அதை நாம் ஒதுக்கி விடலாம் என்பது போன்றது அல்ல. சபையிலுள்ள ஓர் உறுப்பினரே இந்த சபையைப் பற்றி 'The House is going to dogs' என்பதாகக் குறிப்பிடுவது வேதனைக்குரியதாக இருக்கிறது. இந்த அவையிலுள்ள ஓர் உறுப்பினர் மீதே உரிமைப் பிரச்சினையை எழுப்புவது எனக்குச் சங்கடமான விஷயம் தான். ஆயினும் அவையின் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதனால், தவறான நிலைக்குப் போனாலும் அதைச் சரிசெய்யவேண்டும் என்பதனால் நான் இதை எழுப்பியிருக்கிறேன். இந்தச் சபை ஒழுங்காக நடக்கவில்லை, 'The House is going to dogs' என்று சொல்வது, நாம் என்ன வேறு பிராணிகளாக ஆகிவிட்டோமா என்று வருந்தத் தக்க அளவுக்கு கவலைப்படுகிற போக்காக இது இருக்கிறது.

'There is a clear imputation that the House is not performing its duties in the way it should do' என்ற ஒரு அம்சத்தை வைத்து நான் இதை எழுப்புகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்திப் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் நான் இரண்டு தினங்களுக்கு முன்பு இந்த அவையில் உபயோகித்த வாக்கியம் குறித்து இங்கே உரிமைப் பிரச்னை கொண்டு வந்து இருக்கிறார்கள்.

இந்த அவையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும், அவையின் நடவடிக்கைகள் செம்மையாக நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தைக் குலைக்கும் வகையில் எந்த விதமான ஆங்கிலச் சொற்றொடர்களும் இந்த அவையில் பயன்படுத்தக் கூடாது என்ற கவலையில் மாண்புமிகு தங்கமணி அவர்கள் இந்தப் பிரச்னையை எழுப்பி இருப்பதைப் பற்றி நான் மெத்த மகிழ்ச்சி யடைகிறேன். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான். சபாநாயகர் அவர்கள்—ஒரு மரபு பல ஆண்டுகாலமாக பின்பற்றப் பட்டு வருகிறது—எழுந்து நின்றால் மற்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று பேசக் கூடாது. அது ஒரு ஜனநாயக மரபு. அந்த மரபைக் குலைக்கும் வகையில் சபையிலே ஏதாவது நிகழ்ச்கள் நடந்தால், அது எந்த உறுப்பினராக இருந்தாலும் சரி, ஒரு உறுப்பினர் தலைவரின் ஆணைக்குக் கட்டுப்படாமல் நடந்து இருந்தால் கடைசி ஆயுதமாக சபாநாயகர் அவர்கள் எழுந்து நின்று அப்படி எழுந்து நிற்பதன் வாயிலாக சபாநாயகரின் ஆணைக்குக் கட்டுப்படாமல் பேசிக்கொண்டிருக்கும் உறுப்பினரை உட்காரச் செய்வது ஒரு சிறந்த மரபாக நாம் கடைபிடித்து வருகிறோம். ஆனால் அன்றைய தினம் சபாநாயகர் அவர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தும் 4-5 உறுப்பினர்கள் தொடர்ந்தாற்போல் எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்த நிலையில் தான், அந்த மரபு மீறப்படுகிறது என்ற எண்ணத்தில் நான் அந்தச் சொற்றொடரை
going to dogs' என்று சொன்னேன். அந்த சொற்றொடர் ஆங்கிலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு இடியம். 'இடியம்' என்று சொன்னால் 'மரபு மொழி, மரபு சொற்றொடர்' என்று பொருள். அந்தச் சொற்றொடர் மசபாக, வழக்கமாக, பாரம்பரிய மாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

1973 நவம்பர் 23]

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்று சொல்வதை விட்டுவிட்டு ஏதோ வியாக்கியானம் சொல்லிக் கொண்டிருக்கிறார். அன்றைக்கு மிகவும் முக்கியமான பிரச்னைமீது பேசுவதற்கு அனுமதி தர நேரம் இல்லை என்று சொன்னீர்கள். இவர் வியாக்கியானம் கொடுத்துக் கொண்டிருப்பதை எப்படிக் கேட்பது?

திரு. எம். ஏ. லத்தீப்: அந்த மரபு மொழிக்குட்பட்டுத்தான் சொன்னேன். 'இடியம்' என்ற சொற்றொடர் ஆங்கிலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். நம்முடைய அம்மையாரைப் போன்றவர்கள், மதிப்பிற்குரிய தங்கமணி போன்றவர்கள் அதை நல்ல முறையில் அறிந்து இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் ஒரு வழக்கறிஞன் என்ற முறையிலும், அதே நோத்தில் ஆங்கிலத்தில் தங்கமணி அவர்கள் போல் இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு தெரிந்தவன் என்ற முறையிலும், எவ்வளவுதான் உணர்ச்சிகளுக்கு உட்பட்டாலும், ஆத்திரத்திற்கு ஆட்பட்டாலும், அந்த ஆத்திரத்தில் உணர்ச்சியில் பேசினாலும், எந்த ஒரு தவறான வார்த்தையும் என்னுடைய வாயிலிருந்து சொல்லக்கூடாது என்று நான் பழக்கப்பட்டவன். நான் அப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லும் பழக்கத்தை உடையவனும் அல்ல. அப்படிச் சொல்லவும் மாட்டேன். இந்த மன்றத்தின் மரபுகள் காப்பாற்றப்பட வேண்டு மென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் சொன்னேன். எந்த ஒரு உறுப்பினரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதை மட்டும் நான் உறுதியாகச் சொல்கிறேன். ஒரு களங்கமும் வரக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் சொல்லப் பட்டது, யாரையும் புண்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தில் சொல்லப்பட்டது அல்ல என்பதை மட்டும் உறுதியாகத் தெரிவித்து முடிவை, தலைவரவர்களே, உங்களுக்கு விடுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நான் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அந்த வார்த்தைகள் The House is going to dogs ஒரு இடியம் என்று திரு. லத்தீப் அவர்கள் கூறினர்கள். அதன் பொருள் என்ன

என்பதற்கு 'சேம்பர்ஸ் டிக்ஷனரியில்' என்ன பொருள் கூறப் பட்டிருக்கிறது என்றால் 'to be ruined' அப்படியானால் 'The House is to be ruined' என்று சொல்வது மாதிரி பொருள் ஆகிறது. ஆதலால் தயவுசெய்து நம்முடைய மாமன்றத்தின் மரபைக் காப்பாற்றும் வகையில் இந்த மாதிரியான ஆங்கில சொற்களை நாம் உபயோகிக்கும் நேரத்தில் அது கடுமையாக இருக்காமல் இருப்பதற்கு அதைத் திரும்பப் பெற்றுக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். நான் மிகவும் வேதனைப்பட்டு, அதிலும் குறிப்பாக 'அப்போசிஷன் பிளாக்கில்' இருக்கிற ஒரு அங்கத்தினருக்கு இந்த மாதிரியான நிலைமை யேற்பட்டதே என்பதற்கும் வருத்தம் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன். ஆதலால் இந்தப் பிரச்னையை வெகு நேரம் நீட்டிக் கொண்டிருக்காமல் அதைத் திரும்பப்பெற்றுக் கொண்டு இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு ஏற்படுத்துவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தை தலைவரவர்களே, உங்கள் மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, நான் என்னுடைய கருத்தைச் சொல்லிவிட்டேன். அந்த மரபு மொழியை, இடியத்தை நல்ல எண்ணத்தில்தான் பயன்படுத்தினேன். யாரையும் புண் படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் பயன்படுத்தவில்லை. நான் அந்த மாதிரி எண்ணத்தில் சொல்லவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நேற்றைய தினம் அலுவல் ஆய்வுக்குழுவில் தங்களுடைய தலைமையில் அனைத்துக்கட்சித் தலைவர்களும், ஆளும் கட்சியின் சார்பில் நானும் அமர்ந்து இது பற்றிப் பேசி ஒரு முடிவு எடுத்து இருக்கிறோம். அந்த முடிவின்படி, நேற்றைக்கு திரு. லத்தீப் அவர்கள் யாருடைய மனதையாவது புண்படுத்தியிருந்தால் வருத்தம் தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அது இப்போது நடைபெறவில்லை. அது நடைபெற்றுவிட்டால் எல்லாம் முடிந்து விடும் என்று கருதுகிறேன்.

1973 நவம்பர் 23]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, அலுவல் ஆய்வுக்குழுவில் பேசப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். நான் அலுவல் ஆய்வுக் குழுவில் சாதாரணமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். அந்த ஆங்கில சொற்றொடரைப் புரிந்து கொள்ளாமல், தன்னைத்தான் சொன்னார் என்று யாராவது எடுத்துக் கொண்டால், அதற்காக நான் அந்த வார்த்தைகளை அங்கே சொன்னேன். முனு ஆதி அவர்கள் அப்படிச் சொல்லட்டும். முனு ஆதி வந்து சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட உறுப்பினரைப் பற்றியது அல்ல இது. ஒரு உறுப்பினர் வருத்தம் இருப்பதாகத் தெரிவித்தாலும் வருத்தம் தெரிவிப்பதாகச் சொன்னீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : திரும்பவும் சொல்கிறேன், நான் இந்த அவையின் கௌரவத்தைக் குலைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை. நிச்சயமாக அப்படிச் சொல்லமாட்டேன் என்ற உறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர் 'இடிய'-த்தைப் புரிந்து கொள்ளவில்லையென்றால், என்று சொல்கிறார்கள். There is an insinuation. We cannot tolerate it. What is that idiom ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேரவைத் தலைவர் அனுமதியில்லாமலே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

இந்த உரிமை மீறல் பிரச்னை மீது, என்னுடைய தீர்ப்பை நான் நாளை தெரிவிக்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) சென்னை, இராயபுரம் கல்மண்டபத்துக்கருகில், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மீது போலீசார் தடியடி நடத்தினார்கள் எனச் சொல்லப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி, அவர்கள் 'The Police lathi charge on 20th November 1973 on 5,000 strong high school students' procession near Kalmandapam, Royapuram, Madras injuring several students and consequent unrest. The procession is at the call of the Tamil Nadu Students Federation to cancel the S.S.L.C. Examination fees'.